1974 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. க. இராசாராம்: தலைவர் அவர்களே, சென்னை நகரத்தில், 1,600 குடிசைப் பகுதிகள் இருக்கின்றன. 7 ஆண்டுக் காலத்திலே அவைகள் கட்டிக் கொடுக்கப்பட இருக்கின்றன. மக்கள் நல் வாழ்வுத் துறை விருப்பத்திற்கு நேர்மாறுகக் குடும்பங்களைப் பெருக்கிக் கொண்டே இருந்தால், நாடு சமாளிப்பது மிகவும் கடினம். ஆகவே, அப்படிப்பட்ட கோரிக்கைகளை உறுப்பினர் அவர்கள் மக்கள் மன்றத்தில் வைக்க வேண்டாமென்று கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எம். சுரேந்திரன்: குடிசை மாற்று வாரிய வீடுகளிலே யார் இருக்க வேண்டுமோ அவர்களுக்குப் பதிலாக, வேறு ஆட்கள் இருந்ததாக, நால்வர் மீது நடவடிக்கை எடுத்ததாக அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். இன்னும் எவ்வளவு பேர் இருக்கக் கூடும் என்று அரசாங்கத்திற்கு யூகம் இருக்கிறதா? அல்லது கணக்கு இருக்கிறதா? வீட்டை வாடகைக்கு விடுகின்றவர்கள்மீது என்ன நடவடிக்கை எடுக்கப்படுகிறது என்பதையும் ஏற்கனவே எடுக்கப்பட்டிருக்கின்ற குடிசைகள் எவ்வளவு இருக்கின்றனவோ, அவ்வளவு வீடுகள் தானே கட்டப்படுகின்றன, அப்படி இருக்கும்போது, ஒரே குடும்பத்தில் பல பேருக்கு வீடு கொடுக்கப்படுகிறது என்று சொல்லப்படுகிறதே, அதில் உண்மை நிலை என்ன என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. க. இராசாராம்: சில பேர் வாடகைக்கு விட்டு விடுகிறுர்கள். பின்னலே மீண்டும் குடிசைகள் போட்டுக்கொள்கிறுர்கள். அப்படிப்பட்ட தவறுகள் சில இடங்களிலே நடைபெறுகின்றன. நாங்கள் போகிற இடங்களிலே பார்க்கிறோம். அப்படிப்பட்ட தவறுகள் செய்த 4 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. அதிகமான குற்றவாளிகள் அங்கே இல்லையென்பதை மட்டும் தெரிவித்துக் கொள்கிறேன்.

வீட்டு வசதி வாரியக் குடியிருப்புகளில் மக்கள் தொடர்பு

* 736 வினு—திரு. என். டென்னிஸ்: மாண்புமிகு தொழிலாளர் நல அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினுக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மாநில வீட்டு வசதி வாரியம், தனது புதிய குடியிருப்புத் தொகுதிகளிலுள்ளோர் நலனுக்காக மக்கள் தொடர்புத் திட்டம் எதனையும் தொடங்கியுள்ளதா?

(இ) ஆமெனில், அதன் விவரம் என்ன?

[1974 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. க. இராசாராம்: விவரமான அறிக்கை @ ஒன்று அவைமுன் வைக்கப்படுகிறது.

திரு. என். டென்னிஸ்: நான்-ஹவுசிங் போர்டு ஏரியாவிலும் சென்று குறைகளை விசாரித்து, அவற்றை நீக்குவதற்கு அரசாங்கம் கையாண்டு வருகிற முறை யாது?

மாண்புமிகு திரு. க. இராசாராம்: வீட்டு வசதி வாரிய குடியிருப்புகள் சம்பந்தமாகத்தான் இந்த இலாக்கா பணி புரியும். எல்லா இடங்களுக்கும் செல்வது இல்லை. ஏற்கனவே கொடுக்கப்பட்ட விவரப்படி—மின் துறை, போக்குவரத்துத் துறை, காவல் துறை ஆகியவற்றின் அலுவலர்களும் வருவார்கள்—மாதத்தில் ஒருநாள் சென்று அங்குள்ளவர்களின் குறைகளைக் கேட்டு, அடுத்த மாதம் கூட்டம் நடப்பதற்குள் இந்தக் குறைகளை நிவர்த்தி செய்வதற்கு இந்தத் திட்டம் செயல்படுகிறது.

அண்ணாசாலையிலுள்ள மின்வாரியக் கட்டடம்

* 737 வினா—திரு. எம். சுரேந்திரன்: மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அண்ணா சாலையிலிருக்கும் மின்சார-வாரிய கட்டடத்தை புதுப்பித்து 10 நிலை கட்டடமாக கட்டும் செயற்குறிப்பு ஏதேனும் ஆய்வில் உள்ளதா?

(இ) ஆமெனில், இதற்காகும் செலவு மதிப்பிடப்பட்டு இருக்கிறதா?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: (அ) ஆம்.

(இ) ரு. 91.50 இலட்சம்.

திரு. எம். சுரேந்திரன்: இம்மாதிரி கட்டிடங்களைப் பெரிதாகக் கட்டுவது நல்லதுதான். இருக்கக்கூடிய பொருளாதார நெருக்கடியில் டெட்காபிடலாக இப்படி பணத்தை முடக்கிவிடுவது நல்லது தானா? அரசாங்கக் கருத்து என்ன?

மாண்புமிகு திரு. ஓ. பி. இராமன்: சில விவரங்கள் முழுமையாகத் தெரியாத காரணத்தினால் இந்தக் கேள்வியை எழுப்புகிறார்கள். மின்சார வாரியம் கட்டிடம் இல்லாது பல இடங்களில் வாடகைக்

@ 137-ம் பக்கத்தில் இணைப்பு II ஆக அச்சிடப்பட்டுள்ளது.